# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2019.07.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தம்)

**(86 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் கட்டளைச்**
**சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்*
*பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன்பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (86 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ், ஆனால் ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லாமல் பதிவுசெய்யப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்களின் சட்ட விளைவாந்தன்மைக்கு ஏற்பாடுசெய்வதற்காகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம், ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஏலவே பதிவுசெய்யப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுகளின் வலுவுறுத்தற்படற்பாலத்தக்க தன்மை காலப்பகுதி தொடர்பாகவும் 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் அந்த நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்களைப் பதிவுசெய்கின்ற தேவைப்பாடு தொடர்பாகவும் அவை மேலும் வலுவுறுத்தற்படற்பாலதாக இருப்பதற்காகவும் அவற்றின் முன்னுரிமை தொடர்ந்து நிலவுவதற்காகவும் ஏற்பாடுசெய்கின்றது.

ச.வ- ஓ. 64/2017

**(86 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச் சீட்டுகள் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் திகதியும்.

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

86 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**2.** (86 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, ''பண்டங்களைப் பாதிக்கின்ற விற்பனை உண்டியல் ஒன்றாக ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்தும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பண்டங்களைப் பாதிக்கின்ற விற்பனை உண்டியல் ஒன்றாக 2019 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்குமிடத்தும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது.

ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்ட விற்பனை உண்டியல் தொடர்பான ஏற்பாடுகள்.

**3.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று, எந்த நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டு ஒன்று விற்பனை உண்டியல் ஒன்றாக ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டு வலுவில் இருக்குமிடத்து, அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டு இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றிற்கு தொடர்ந்து வலுவிற்கிடற்பாலதாதல் வேண்டும்; ஆனால் அத்தகைய இரண்டு ஆண்டுகள் காலப்பகுதி முடிவடையமுன்னர் விற்பனை உண்டியல் ஒன்றாக 2019 ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனை உண்டியல் ஒன்று 2019 ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதன்மேல், எந்தத் தேதியன்று அத்தகைய விற்பனை உண்டியல் தொடக்கத்தில் சட்டரீதியாக வலுவிற்கிடற்பாலதாக வந்ததோ அந்தத் தேதியிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விற்பனை உண்டியல் தொடக்கத்தில் சட்டரீதியாக வலுவிற்கிடற்பாலதாக வந்துள்ள நேரத்தில் அந்த முன்னுரிமை உரித்துடையதாக வந்ததோ அந்த ஏதேனும் முன்னுரிமை தொடர்ந்து மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 2019 ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாதிருக்கின்றதான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனை உண்டியல் ஒன்று அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் சட்டரீதியான வலுவிற்கிடற்பாலதல்லாததாக வருதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.